**செய்தி வெளியீடு எண்: 678** **நாள்:18.09.2020**

**சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடிK.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**
**நாள் – 18.9.2020**

*****

வணக்கம்.

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்று தமிழ்நாட்டில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள

**இந்நிறுவனத்தின் வேந்தர் டாக்டர் மரியஜீனா ஜான்சன் அவர்களே!**

**சிறப்பு விருந்தினர் டாக்டர் மரிய ஜான்சன் அவர்களே!**

**துணை வேந்தர் டாக்டர் சசிபிரபா அவர்களே!**

**கல்பாக்கம், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் அருண் குமார் பாதுரி அவர்களே!**

**பதிவாளர் டாக்டர் ராவ் அவர்களே!**

பேராசிரிய மற்றும் ஆசிரியப் பெருமக்களே!

நாளைய உலகில் பல்வேறு துறைகளில் சாதிக்கப் பிறந்த மாணவச் செல்வங்களே!

மாணவச் செல்வங்களை ஈன்றெடுத்த பெற்றோர்களே!

பத்திரிகைத் துறை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘‘பட்டமளிப்பு விழா நிகழ்வு என்பது ஆண்டு முழுவதும் இரவு பகல் பாராமல் நீங்கள் மேற்கொண்ட கடின உழைப்பிற்கு அங்கீகாரம் வழங்குவதாகும். உங்களது பெற்றோரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தருணம் இதுவாகும். ஆசிரியர்களுக்கும் அவர்களது உழைப்பிற்குக் கிடைத்த அங்கீகாரமாகும்’’, என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

மாணவர்களின் உயர்கல்வித் தேவையை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சுயநிதிக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு அனுமதியளித்து, உயர்கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். அந்தப் புரட்சியில் உதித்த ஒன்றுதான் சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழகங்கள் அறிவுலகின் கோயில்கள். இங்கு மாணவர்கள் அறிவின் ஆழத்தை அறிந்து கொள்ள வழிகாட்டப்படுகிறார்கள். இக்கல்விச் சேவையை சிறப்பாகச் செய்வதால் தான், இந்தியாவில் இருந்து மட்டுமின்றி, உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஆண்டுதோறும், ஆயிரக்கணக்கில் மாணாக்கர்களைக் கல்வி பயில ஈர்க்கின்றது.

இந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் 46 இளங்கலை மற்றும் 21 முதுகலை பட்டப்படிப்புகளை வழங்கும் 27 துறைகளில்

ஆயிரக்கணக்கான மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சிஅடைகிறேன்.

சத்தியபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறுவனர் மரியாதைக்குரிய டாக்டர் ஜேப்பியார் அவர்கள், சட்டமேலவை உறுப்பினராகவும் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவராகவும் மக்களுக்காக தொண்டாற்றியவர் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

திரு.ஜேப்பியார் அவர்கள், தான் ஆரம்பித்த கல்வி நிறுவனத்திற்கு, தன்னை ஆளாக்கிய தலைவரின் தாயார் பெயரான சத்தியபாமா என்று பெயர் சூட்டியது, அவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் மேல் கொண்டுள்ள விசுவாசத்தை தெளிவாக காட்டுகின்றது. அவரது அயராத உழைப்பினால், கல்லூரி என்ற நிலையிலிருந்து, இன்று நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற நிலைக்கு இந்நிறுவனம் உயர்ந்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் மேலும் தழைத்தோங்க எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**“சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்ற விழிப்புணர்வு உடையவர் எவரோ, அவரே சிறந்த மனிதர்” என்றார் அண்ணல் அம்பேத்கர் அவர்கள்.** கிராமப்புறங்களில் உள்ள அரசு பள்ளிகளைத் தத்தெடுப்பது, அந்த பள்ளிகளுக்கு நவீன உபகரணங்களை வழங்குதல், ஏழை மாணாக்கர்களின் கல்விக்கு உதவி செய்வது போன்ற பணிகள், சமுதாய முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற இந்த நிறுவனத்தின் உயர்ந்த எண்ணத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கல்விச் சேவையில், இந்த நிறுவனம் இடையறாது ஆற்றி வரும் பணிகளுக்காக, அரசுத்துறைகள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து பல அங்கீகாரங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளது என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் இஸ்ரோ நிறுவனத்துடன் இணைந்து துணைக்கோள் ஒன்றினை விண்ணில் செலுத்திய செயல், இந்தப் பல்கலைக்கழகத்தின் தனித்துவத்தை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

இன்று நடைபெறும் இந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற உள்ள 3,190 இளநிலை மற்றும் முதுகலை மாணாக்கர்களுக்கும், முனைவர் பட்டம் பெற உள்ள 129 ஆராய்ச்சி அறிஞர்களுக்கும், தங்கப் பதக்கம் பெற உள்ள 20 மாணாக்கர்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துகளையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**“அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றி கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.** எனவே, மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசும் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இந்தியாவில் உயர்கல்வியில் சிறந்து விளங்கும் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

உயர்கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

- ❖ அனைவருக்கும் உயர்கல்வி கிடைப்பதை உறுதி செய்வதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.
- ❖ 2011–12ஆம் ஆண்டிலிருந்து 2019-20ஆம் ஆண்டு வரை அதிகளவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தமிழகத்தில் திறக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்துள்ளது.
- ❖ 2019–20ஆம் ஆண்டில் 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.
- ❖ 2013-14ஆம் ஆண்டிலிருந்து 2018-19ஆம் ஆண்டு வரையில், 21 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ❖ கடந்த 2012-13ஆம் ஆண்டிலிருந்து 4 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த கல்வி நிலையங்கள் நகர மற்றும் கிராம மக்கள் எளிதில் சென்றடையும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

- ❖ சென்ற 2011-12ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,577 பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ❖ இதனால் உயர்கல்வி கற்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- ❖ சமீபத்தில் தேசிய தர நிர்ணயக் கட்டமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கையில், உயர் கல்வி தரவரிசைப் பட்டியலில், அகில இந்திய அளவில் உள்ள முதல் 100 பல்கலைக்கழகங்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த 18 பல்கலைக்கழகங்களும், முதல் 100 பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாட்டை சார்ந்த 18 பொறியியல் கல்லூரிகளும், முதல் 100 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 32 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இடம் பெற்று சாதனை படைத்துள்ளன என்பதை பெருமிதத்துடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
- ❖ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதற்காக 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கட்டணச் சலுகை, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை, விலையில்லா மடிக்கணினி, கல்வி ஊக்கத் தொகை, இலவச பேருந்து அட்டை மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை படிக்கும் மாணவர் வரை இலவச கல்வி போன்ற முன்னோடி திட்டங்களால் மாணாக்கர்களின் சேர்க்கை

விகிதம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ❖ 2020-21ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை வளர்ச்சிக்காக 5 ஆயிரத்து 52 கோடியே 84 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
- ❖ மாணாக்கர்களின் கல்வி மேம்பட மாண்புமிகு அம்மாவின் அரசு இதுபோன்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- ❖ மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் முயற்சியின் காரணமாக இன்று உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 ஆக உயர்ந்துள்ளது, இந்தியாவிலேயே உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ❖ சமீபத்தில்கூட புதிய ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் மற்றும் சாய் தனியார் பல்கலைக்கழகங்களின் கட்டடங்களுக்கு நான் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தேன். மேலும், விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பல்கலைக்கழகம் நிறுவிட மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அமைதியான சூழ்நிலை, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம் அதிகமாக உள்ளதால், இன்று பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அதிக அளவில் முன்னுக்கு வருகின்றன. மேலும், தமிழ்நாடு அரசால்

நடத்தப்பட்ட இரண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்புகளின் மூலம் அதிக அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

தற்போது, கொரோனா தொற்று நோயின் தாக்கத்தால், தொழில் துறையில் நிலவிவரும் மந்த நிலையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்பது பட்டப்படிப்பு முடித்து, பணியினை தேடவிருக்கும் உங்களுக்கு மிகுந்த நம்பிக்கையூட்டும் செய்தி.

சுயமாக தொழில் தொடங்குபவர்களுக்கும், தமிழ்நாடு அரசு பல்வேறு சலுகைகளையும், ஊக்கத்தையும் அளித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, பட்டம் பெற்று வெளியில் வருபவர்கள், சுயதொழில் தொடங்குவதற்கு முனைப்புக் காட்ட வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பவர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உயர்ந்த சிந்தனைகள், உன்னத லட்சியங்கள், பரந்த மனப்பான்மை கொண்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களிடம் ஒரு ஐன்ஸ்டீன் இருக்கிறார், ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் இருக்கிறார், ஒரு சுந்தர் பிச்சை இருக்கிறார். இன்னும் வருங்காலத்தில் உலகத்தில் பல்வேறு கண்டுபிடிப்புகளை உருவாக்க இருக்கும் மேதைகளும், நாட்டை வழிநடத்தும் தலைவர்களும் பலர் இங்கே இருக்கின்றீர்கள்.

எழுந்து நடந்தால், இமய மலையும் நமக்கு வழி கொடுக்கும். உறங்கிக் கிடந்தால், சிலந்தி வலையும் நம்மை சிறைப் பிடிக்கும் என்பதை பட்டம் பெற்று, புதிய உலகத்தில் அடியெடுத்து வைக்கும் நீங்கள் உணர்ந்து செயல்பட்டால் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

**"வித்தியாசமாகச் சிந்திக்கும் துணிவு**
**புதியன கண்டறியும் துணிவு**
**புதிய பாதைகளில் பயணிக்கும் துணிவு**
**முடியாததை முடித்துக் காட்டும் துணிவு**
**இவையெல்லாம் இளமையின்**
**சிறந்த அடையாளங்கள்!"**

**என்றார் முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு அப்துல்கலாம் அவர்கள்.**

**"அறிவாலும் ஆற்றலாலும் ஆகாதது ஒன்றுமில்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.** எனவே மிகச் சிறந்த பல்கலைக்கழகத்தில் உங்களுக்கு கிடைத்துள்ள கல்வி சார்ந்த அடித்தளம், உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு உந்து சக்தியாக இருக்கும். இங்கே கடுமையான உழைப்பாலும், ஒழுக்கத்தாலும் சிறந்த மதிப்பெண்களையும், பரிசுகளையும் பெற்றவர்களை நான் மனதார பாராட்டுகிறேன். மிகப்பெரிய அளவில் மதிப்பெண்கள் பெறாதவர்களுக்கும் ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. உங்களுக்குத் தேவையான எதையும் உங்களால் பெறமுடியும். நிமிர்ந்த நன்னடையுடன், நேர்கொண்ட பார்வையுடன் நீங்கள் பயணிக்க வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களையும், ஆசிரியர்களையும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களையும், வளர்ச்சிக்குத் துணையாக நின்ற பெருந்தகையாளர்களையும் நான் வாழ்த்துகிறேன். சமூகத்தில் குழந்தைகளின் கனவுகளை தாங்கிக் கொண்டு உறுதுணையாக நிற்கின்ற பெற்றோர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை பகிர்ந்து கொள்கிறேன்.

**கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்!**
**கடமை இருந்தால் வீரனாகலாம்!**
**பொறுமை இருந்தால் மனிதனாகலாம்!**
**இந்த மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்!**

என்று பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். எனவே நமது நாட்டின் வருங்காலத் தலைவர்களாகிய உங்களுக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்லமுறையில் ஏற்பாடு செய்த சத்யபாமா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திற்கும், நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**